| அலகு: 4. மி.கா.தூ& மா.தி.மி (25 marks) | |
|---|---|
| 1 mark → 4 Questions | 5 mark → 1 Question 55 |
| 3 mark → 2 Questions 37, 38 | 10 mark→ 1 Question 65 |

**4. மின்காந்த தூண்டலும் மா.தி.மி - 1 mark Questions**

1. பரப்பு வெக்டர் $\vec{A}$ க்கும் அதன் சமதளம் A க்கும் இடையேயுள்ள கோணம்
அ) π ஆ) **π /2** இ) 2π ஈ) $0^0$ M-06, J-09]

2. மின்காந்த தூண்டல் பயன்படுத்தப்படாதது [DPM,M-06,08,J-07,09,S-08]
அ) மின்தேய்ப்பு பெட்டி **ஆ) அறை சூடேற்றி**
இ) மின்னேற்றி ஈ) அடைப்புச்சுருள்

3. லென்ஸ் விதி எதன் அடிப்படையிலானது [M-07,08,11,12,J-12]
**அ) மின்னூட்ட அழிவின்மை** ஆ) பாய அழிவின்மை
இ) உந்த அழிவின்மை ஈ) ஆற்றல் அழிவின்மை

4. ஹென்றி என்பது [DPM, J-06,11,M-12]
அ) V A $s^{-1}$ ஆ) Wb A இ) Ω s **ஈ) இவை அனைத்தும்**

5. ஜெனரெட்டர் விதி (மின்னியற்றி விதி) என்பது (அ-06, ஜு-07)
அ) பிளமிங்கின் இடது கை விதி
**ஆ) பிளமிங்கின் வலது கை விதி**
இ) மாக்ஸ்வெல்லின் வலக்கை திருகு விதி
ஈ) ஆம்பியர் நீச்சல் விதி

6. மின்மாற்றி செயல்படுவது
அ) AC மற்றும் DC யில்
ஆ) DC ஐக்காட்டிலும் AC ல் திறம்பட செயல்படும்
**இ) AC யில் மட்டும்** ஈ) DC யில் மட்டும் (மா-07செ-07)

7. மின்மாற்றியில் சுழல் மின்னோட்ட இழப்பினைக் குறைப்பதற்கு பயன்படுத்தப்படுவது (மா-08)
அ) மியுமெட்டலினால் உருவாக்கப்பட்ட மெல்லிய தகடுகளினால் ஆன உள்ளகம்
**ஆ) ஸ்டெல்லாயினால் உருவாக்கப்பட்ட மெல்லிய தகடுகளினால் ஆன உள்ளகம்**
இ) கூடு வகை உள்ளகம் ஈ) தடிமனான தாமிரக்கம்பிகள்

8. ஒரு நீண்ட வரிச்சுருளின் தன்மின்தூண்டல் எண் எதைச்சார்ந்ததல்ல?
அ) சுருளின் சுற்றுக்களின் எண்ணிக்கை
ஆ) சுருளின் குறுக்குப்பரப்பளவு இ) சுருளின் பரப்பளவு
**ஈ) சுருளில் பாயும் மின்னோட்டம்** [S-12]

9. ஏற்று மின்னியிற்றியால் உயர்த்தி கொடுக்க முடியாதது [J-08,S-09]
அ) உள்ளீடு மின்னோட்டத்தை ஆ) உள்ளீடு மின்னழுத்தம்
**இ) உள்ளீடு மின்திறன்** ஈ) இவையனைத்தும்.

10. மின் அனுப்பீட்டுக் கம்பிகளில் ஏற்படும் திறன் இழப்பு எப்பொழுது குறைவாக இருக்கும்?
அ) மின்னழுத்தம் குறைவாகவும் மின்னோட்டம் அதிகமாகவும் உள்ளபோது
ஆ) மின்னழுத்தம் மற்றும் மின்னோட்டம் இரண்டும் அதிகமாக உள்ளபோது
**இ) மின்னழுத்தம் அதிகமாகவும் மின்னோட்டம் குறைவாகவும் உள்ளபோது**
ஈ) மின்னழுத்தம் மற்றும் மின்னோட்டம் இரண்டும் குறைவாக உள்ளபோது (அ-06,மா-13)

11. நேர்கடத்தியின் தன்மின்தூண்டல் (மா-07,09,12,13, ஜு-13 )
**அ) சுழி** ஆ) முடிவிலி
இ) மிக அதிகம் ஈ) மிகவும் சிறியது

12. நேர் திசை மின்னோட்டத்தை தன் வழியே அனுமதிக்காத கருவி
**அ) மின்தேக்கி** ஆ) மின்தூண்டி
இ) மின்தடையாக்கி ஈ) இவையனைத்தும்
[DPM ,J-09, M-10,O-10,J-11,13,O-11,M-12,13]

13. 3 கட்ட AC மின்னியற்றியில் 3 கம்பிச்சுருள்கள் ஒன்று டன் ஒன்று சாய்ந்திருக்குமாறு வைக்கப்பட்டுள்ள கோண அளவு (அ-08)
அ) $90^0$ ஆ) $180^0$ **இ) $120^0$** ஈ) $360^0$

14. மாறுதிசை மின்னோட்டத்தின் பயனுறு மதிப்பு [J-10]
அ) $I_0\sqrt{2}$ ஆ) $\frac{I_0}{\sqrt{2}}$ இ) $I\sqrt{2}$ ஈ) $2I_0$

15. ஒரு செவ்வக வடிவ கம்பிச்சுருள் ஒரு சீரான காந்தப்புலத்தில் காந்தப்புலத்திற்கு செங்குத்தாக அமைந்த அச்சைப்பொறுத்து சீராக சுழற்றப்படுகிறது. கம்பிச்சுருளின் தளம் செங்குத்தாக அமையும்போது [O-10]
அ) (i) காந்தப்பாயம் சுழியாகும் (ii) தூண்டப்பட்ட மின்னியக்கு விசை சுழியாகும்
ஆ) (i) காந்தப்பாயம் பெருமம் (ii) தூண்டப்பட்ட மின்னியக்கு விசை பெருமம்
**இ) (i) காந்தப்பாயம் பெருமம் (ii) தூண்டப்பட்ட மின்னியக்கு விசை சுழியாகும்**
ஈ) (i) காந்தப்பாயம் சுழியாகும் (ii) தூண்டப்பட்ட மின்னியக்கு பெருமம்

16. மாறு திசை மின்னோட்டச்சுற்றில் [M-09]
**அ) சராசரி மின்னோட்டத்தின் மதிப்பு சுழியாகும்**
ஆ) மின்னோட்டத்தின் இருமடி சராசரி மதிப்பு சுழியாகும்
இ) சராசரி மின்திறன் இழப்பு சுழியாகும்
ஈ) மின்னோட்டத்தின் மதிப்பு உச்ச மிப்பைப்போல் √2 மடங்கு

17. மின் தூண்டி வழியே மாறு திசை மின்னோட்டம் செல்லும்போது
**அ) மின்னோட்டம் π /2பின் தங்கியுள்ளது**
ஆ) மின்னோட்டத்துடன் ஒத்த கட்டத்தில் உள்ளது
இ) மின்னோட்டம் π/2 முந்திச்செல்கிறது
ஈ) எதுவுமில்லை [J-06]

18. ஒரு மாறுதிசை மின்னோட்ட சுற்றில் (AC சுற்று) மின்னழுத்தம் மின்னோட்டத்தைக் காட்டிலும் π/2 கட்ட அளவில் முன்னோக்கி இருக்கிறது. எனவே இச்சுற்றில்
**அ) மின்தூண்டி மட்டுமே உள்ளது (L)**
ஆ) மின்தேக்கி மட்டுமே உள்ளது (C) இ) மின்தடையாக்கி மட்டுமே உள்ளது
ஈ) L, C, R ஆகியவை தொடரிணைப்பில் உள்ளது [M-11]

19. ஒரு மாறுதிசை மின்சுற்றில் செயல்படுத்தப்படும் மின்னோட்டமானது $I = I_0 \sin(\omega t - \pi/2)$ , $e = E_0 \sin(\omega t + \pi/2)$ என்ற மின்னியக்கு விசை விட ----- என்ற கட்ட அளவில் முந்திச் செல்லும்
அ) 0 ஆ) π/4 இ) π/2 **ஈ) π** [O-06]

20. ஒரு மாறுதிசை மின்சுற்றில் செயல்படுத்தப்படும் மின்னியக்கு விசை $e = E_0 \sin(\omega t + \pi/2)$, $I = I_0 \sin(\omega t - \pi/2)$ என்ற மின்னோட்டத்தை விட ---- என்ற கட்ட அளவில் முந்திச் செல்லும்
அ) π ஆ) π/4 **இ) π** ஈ) 0 **[DPM]**

21. ஒரு AC மின்சுற்றில் எந்தவொரு கணத்திலும் மின்னியக்கு விசை மின்னோட்டத்திற்கான சமன்பாடுகள் முறையே
$e = 200 \sin\left(\omega t - \frac{\pi}{3}\right)$ மற்றும் $i = 10 \sin\omega t$ ஒரு முழு சுற்றில் பயன்படுத்தப்படும் சராசரி திறன் (மா-13)
அ) 2000 W ஆ) 1000 W **இ) 500 W** ஈ) 707 W

22. ஒரு தொடர் RLC a.c மின்சுற்றில் எந்தவொரு கணத்திலும் மின்னோட்டம் மற்றும் மின்னழுத்தம் முறையே $i = I_0 \sin(\omega t - \pi/3)$ மற்றும் $e = E_0 \sin\omega t$ எனஅமையும்போது, மின்னோட்டம் ஆகியவற்றுக்கு இடைப்பட்ட கட்ட வேறுபாடு (ஜு-13)
அ) சுழி ஆ) $180^0$ **இ) $60^0$** ஈ) $45^0$

23. RLC தொடர் சுற்றில் ஒத்திசைவு நிலையில் [S-09,10]
அ) தொகுபயன் மின் எதிர்ப்பு (Z) பெருமம்
ஆ) மின்னோட்டம் சிறும மதிப்பை பெறும்
**இ) தொகுபயன் மின் எதிர்ப்பு (Z) மின்தடைக்கு சமம்**
ஈ) $\gamma_0 = \frac{1}{\sqrt{LC}}$

24. ஒரு LCR சுற்றில் $X_L = X_C$ என்று இருக்கும்போது அதன் மின்னோட்டம்


***ஆ.முருகையா, முதுகலை ஆசிரியர்- அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி, குரோம்பேட்டை- சென்னை-44.***
மின்னஞ்சல்: *tnhspgtakpm@gmail.com*

அ) சுழி ஆ) ***மின்னழுத்தத்துடன் ஒத்த கட்டத்தில் இருக்கும்***
இ) மின்னழுத்தத்தை விட முன்னோக்கி இருக்கும்
ஈ) மின்னழுத்தத்தை விட பின் தங்கி இருக்கும் (மா-07)

25. RLC தொடர் சுற்றில் ஒத்திசைவு நிலையில் [S-08,10]
அ) மின்னோட்டம் சிறும மதிப்பு பெறும்
ஆ) மின் எதிர்ப்பு பெரும மதிப்பு பெறும்
இ) மின்சுற்று மின் நிலைமத் தன்மையுடையது
ஈ) மின்னோட்டம், மின்னழுத்தத்துடன் ஒரே கட்டத்தி லுள்ளது

26. RLC தொடர் சுற்றில் ஒத்திசைவு நிலையில் (செ-10)
***அ) $X_L = X_C$*** ஆ) $X_L > X_C$ இ) $X_L < X_C$ ஈ) $\omega = \frac{1}{LC}$

27. ஒரு R, L, C ஒத்திசைவு சுற்றின் அதிர்வெண் $\gamma_0$. தன்மின் தூண்டல் இருமடங்காகவும் மின்தேக்கு திறன் இரு மடங்காகவும் ஆனால், சுற்றின் ஒத்திசைவு அதிர்வெண் [J-11]
அ) $2\gamma_0$ ***ஆ) $\frac{\gamma_0}{2}$*** இ) $\frac{\gamma_0}{4}$ ஈ) $\frac{\gamma_0}{\sqrt{2}}$

28. ஒரு மாறுதிசை மின்சுற்றின், அதிர்வெண் அதிகரிக்கும் போது அதில் இணைக்கப்பட்டுள்ள மின்தேக்கியின் மின்மறுப்பு [J-11]
அ) அதிகரிக்கும் ***ஆ) குறையும்*** இ) மாறாது ஈ) சுழியாகும்

29. மின்தேக்கி மட்டுமே உள்ள A.C சுற்றில், சைகையின் அதிர்வெண் சுழியாகும்போது மின்தேக்கியின் மின் மறுப்பு
***அ) முடிவிலி*** ஆ) சுழி
இ) வரம்புள்ள பெருமம் ஈ) வரம்புள்ள சிறுமம் (ஜூ-07)

30. மின்தடை R, மின்தூண்டி L மற்றும் மின்தேக்கி C கொண்ட தொடர் சுற்றில் இணைக்கப்பட்ட ஒரு a.c மின்சுற்றின் தரக்காரணி (Q-factor) என்பது
அ) $Q = \frac{1}{\sqrt{LC}}$ ***ஆ) $Q = \frac{1}{R}\sqrt{\frac{C}{L}}$***
இ) $Q = \frac{1}{R}\sqrt{\frac{L}{C}}$ ஈ) $Q = \frac{1}{\sqrt{LR}}$ [J-08,M-09]

31. நேர் திசை மின்னோட்டத்திற்கு, ஒரு மின்தேக்கியின் மின் மறுப்பு ($X_C$) என்பது
அ) சுழி ***ஆ) முடிவிலி*** இ) $\pi/2$ ஈ) $\pi$ (J-08)

32. கம்பிச்சுருளிலிருந்து புறச்சுற்றுக்கு மின்னோட்டத்தை பாயச் செய்யும் மாறுதிசை மின்னியற்றியின் உறுப்பு
அ) புலக்காந்தம் ஆ) பிளவு பட்ட வளையம்
இ) நழுவு வளையங்கள் ***ஈ) தூரிகைகள்*** [M-10]

33. செவியுணர் அடைப்புச்சுருளில் பயன்படும் உள்ளகம் [S-07, S-09]
***அ) இரும்பு*** ஆ) கார்பன் இ) காரீயம் ஈ) எஃகு இரும்பு

34. ஒரு சுழற்சியில் பயன்படுத்தப்படும் ஓர் A.C மின்சுற்றின் சராசரி திறன் என்பது [M-06]
அ) $E_{rms} I_{rms}$ ***ஆ) $E_{rms} I_{rms} \cos\phi$*** இ) $E_{rms} I_{rms} \sin\phi$ ஈ) $E_0 I_0 \cos\phi$

## 4. மின்காந்த தூண்டலும் மா.தி.மி - I mark Problems

1. கம்பிச்சுருளுடன் தொடர்புடைய காந்தப்பாயம் மாறும் வீதம் 1 வெபர்/நிமிடம் எனில் தூண்டப்படும் மின்னியக்கு விசை
அ) 1V ***ஆ) 1/60V*** இ) 60V ஈ) 0.60V [M-06]

2. ஒரு கம்பிச்சுருளில் பாயும் மின்னோட்டம் 40 $As^{-1}$ மாறும்போது, தூண்டப்படும் மின்னியக்கு விசை 12 V எனில், கம்பிச்சுருளின் தன்மிதூண்டல் எண்
***அ) 0.3 H*** ஆ) 0.003 H இ) 30 H ஈ) 4.8 H [S-09,10,M-11]

3. ஒரு கம்பிச்சுருளில் பாயும் மின்னோட்டம் 2 ஆம்பியரிலிருந்து 6 ஆம்பியருக்கு 0.5 வினாடி நேரத்தில் மாறும்போது, தூண்டப்படும் மின்னியக்கு விசை 12 V எனில், கம்பிச்சுருளின் தன்மிதூண்டல் எண்
அ) ***1.5 H*** ஆ) 6H இ) 0.3H ஈ) 30H [J-06,O-10]

4. மாறு திசை மின்னோட்டத்தின் RMS மதிப்பு 5 A எனில், மின்னோட்டத்தின் பெரும மதிப்பு
அ) 3.536 A ஆ) 70.7 A ***இ) 7.07 A*** ஈ) 7 A [M-10]

5. மாறு திசை மின்னோட்டத்தின் பெரும மதிப்பு 311 V எனில், மின்னோட்டத்தின் RMS மதிப்பு
அ) 110 V ***ஆ) 220 V*** இ) 50 V ஈ) 70.7 V [S-07,M-12]

6. 5 A, DC மின்னோட்டம் உருவாக்கும் அதே அளவு வெப்ப அளவை உருவாக்கும் மாறு திசை மின்னோட்டத்தின் அளவு [S-08,M-09,S-12,J-13]
அ) 50 A rms மின்னோட்டம்
ஆ) 50 A பெரும மின்னோட்டம்
இ) 5 A rms மின்னோட்டம்
ஈ) 5 $\sqrt{2}$ A பெரும மின்னோட்டம்

7. 5 A நேர் திசை மின்னோட்டம் உருவாக்கும் அதே அளவு வெப்ப அளவை உருவாக்கும் மாறு திசை மின்னோட்டத்தின் அளவு
அ) 50 A rms மின்னோட்டம் ஆ) 5 A பெரும மின்னோட்டம்
இ) 15 A rms மின்னோட்டம் ***ஈ) இவற்றுள் ஏதுமில்லை***
(மா-09)

8. ஏற்று மின்மாற்றியில் உள்ளீடு மின்னழுத்தம் 220 V மற்றும் வெளியீடு மின்னழுத்தம் 11 kV எனில், முதன்மை மற்றும் துணைச்சுருள்களில் உள்ள சுற்றுகளில் உள்ள சுற்றுக்களின் தகவு (அ-06, ஜு-07)
அ) 50 : 1 ***ஆ) 1 : 50*** இ) 25 : 1 ஈ) 1 : 25

9. 11,000 W மின்திறன் 220 V மின்னழுத்தில் அனுப்பப்படுகிறது எனில், இணைப்பு கம்பியின் வழியே பாயும் மின்னோட்டம்
***அ) 50 A*** ஆ) 5 A இ) 500 A ஈ) 0.5 A (மா-08)

10. 0.5 $m^2$ குறுக்கு வெட்டு பரப்பையும் 10 சுற்றுக்களையும் கொண்ட ஒரு கம்பிச்சுருளின் தளம் 0.2 $wb/m^2$ காந்தப்புலத்திற்கு குத்தாக உள்ளபோது கம்பிச்சுருளின் வழியே பாயும் காந்தப் பாயம் [J-09, M-10]
அ) 100 Wb ஆ) 10 Wb ***இ) 1 Wb*** ஈ) சுழி

11. 50 Hz அதிர்வெண் AC மூலத்துடன் 300 mH மின்தூண்டி இணைக்கப்படும் போது ஏற்படும் மின்மறுப்பு (செ-07)
அ) 1046 Ω ***ஆ) 94.2 Ω*** இ) 9426 Ω ஈ) 104.6 Ω

12. ஒரு LCR தொடர் மாறுதிசை மின்னோட்டச் சுற்றில் மின்னோட்டத்திற்கும் மின்னழுத்தத்திற்கும் இடையே உள்ள கட்டவேறுபாடு $30^0$. அவற்றின் தொகு பயன் மின் மறுப்பு 17.32 Ω. மின்தடையின் மதிப்பு [J-06]
***அ) 30 Ω*** ஆ) 10 Ω இ) 17.32 Ω ஈ) 1.732 Ω

13. ஒரு மாறுதிசை மின்னோட்டச் சுற்றில் சராசரி மின் திறன் 200 W தோற்ற மின்திறன் 300 W எனில் திறன் காரணியின் மதிப்பு [J-10]
அ) 1.5 ஆ) 0.66
இ) .033 ஈ) 1

## 4. மின்காந்த தூண்டலும், மா.தி. மி 3 மதிப்பெண் வினாக்கள்

1. மின்காந்த தூண்டல் என்றால் என்ன? (மா-08)
2. லென்சின் மின்காந்த தூண்டல் விதியினைக் கூறு. (செ-08)
3. பாரடேயின் மின்காந்த தூண்டல் விதிகளைக் கூறுக. [J-06, J-07,S-07]
4. தன்மின்தூண்டல் - வரையறு. (ஜு-09)
5. தன்மின்தூண்டல் எண்ணின் அலகினை - வரையறு. (ஜு-12)
6. மின்னியக்கு விசையை துண்டும் முறைகளைக் கூறு [M-06,O-10,M-11]
7. பிளமிங்கின் வலக்கை விதியினைக் கூறுக. (மா-07,மா-09,10,ஜு-11)
8. பிளமிங்கின் இடக்கை விதியினைக் கூறுக. (மா-09,10)
9. D.C அம்மீட்டர் மாறு திசை மின்னோட்டத்தை அளவிடாது. ஏன்? (செ-07)
10. மாறு திசை மின்னோட்டத்தின் r.m.s (பயனுறு) மதிப்பு - வரையறு. (ஜு-07,மா-13)
11. மின்மாற்றியின் பயனுறு திறன் வரையறு. (செ-12)
12. மின்தேக்கி D.C ஐத்தடுக்கும், A.C ஐ அனுமதிக்கும். ஏன்?


ஆ.முருகையா, முதுகலை ஆசிரியர்- அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி, குரோம்பேட்டை- சென்னை-44.
மின்னஞ்சல்: tnhspgtakpm@gmail.com

13. RLC தொடர் சுற்றில் மின்னழுத்த மூலத்தின் அதிர்வெண்ணை அதிகரித்தால், மின்னோட்டத்தின் மதிப்பு என்னவாகும்? [DPM]
14. தரக்காரணி என்பதனை வரையறு.(அ-06,ஜூ-11,13, 12,செ-12)
15. AF அடைப்புச்சுருளுக்கும் RF அடைப்புச்சுருளுக்கும் உள்ள வேறுபாடுகளை கூறுக. (ஜு-08)

## 4.மின்காந்த தூண்டலும், மா.தி. மி 3 மதிப்பெண் கணக்கீடுகள்

1. ஒரு சுருளில் மின்னோட்டம் 100 $As^{-1}$ என மாறும்போது 5 V மின்னிய க்கு விசை அதில் தூண்டப்படுகிறது. அதன் தன்மின் தூண்டல் என்ன? (மா-10)
2. வரிச்சுருள் ஒன்றில 2 $As^{-1}$ என்ற வீதத்தில் மாறும் மின்னோட்டம், 10 mV மின்னியக்கு விசையைத் தூண்டினால் வரிச்சுருளின் தன் மின் தூண்டல் என்ன? [DPM]
3. ஒரு சுருளில் 4 A மின்னோட்டம் 0.5 s காலத்தில் 8 A ஆக மாறும்போது மற்றொரு சுருளில் 50 mV மின்னியக்கு தூண்டப்படுகிறது எனில் அவ்விரு சுருள்களுக்கிடையே உள்ள பரிமாற்று மின் தூண்டல் எண்ணைக்கணக்கிடு. [M-06,M-09]
4. ஒரு விமானத்தின் இறக்கையின் முனைகளுக்கிடையே உள்ள தூரம் 20.48 m. இது வடக்கு நோக்கி 40 $ms^{-1}$என்ற வேகத்தில் பறக்கிறது. புவிக்காந்தப் புலத்தின் செங்குத்து கூறு அவ்விட த்தில் 2 x $10^{-5}$ T, எனில், இறக்கையின் முனைகளுக்கிடையேயான மின்னியக்கு விசையை கணக்கிடுக. (ஜு-08)
5. ஒரு விமானத்தின் இறக்கையின் முனைகளுக்கிடையே உள்ள தூரம் 10 m. இது வடக்கு நோக்கி 720 km/hr என்ற வேகத்தில் பறக்கிறது. புவிக்காந்தப் புலத்தின் செங்குத்து கூறு அவ்விட த்தில் 3 x $10^{-5}$ T, எனில், இறக்கையின் முனைகளுக்கிடை யேயான மின்னியக்கு விசையை கணக்கிடுக. (அ-06)
6. நல்லியல்பு மின்மாற்றி ஒன்றில் மின்மாற்று விகிதம் 1:20. அதன் உள்ளீடு திறன் மற்றும் உள்ளீடு மின்னழுத்தம் முறையே 600 mW ,6 V ஆகும். முதன்மை மற்றும் துணைச்சுருள்களில் பாயும் மின்னோட்டங் களைக் காண்க. (செ-08)
7. ஒரு மீட்டர் நீளமும் 0.05 மீட்டர் விட்டமும் கொண்ட வரிச்சுருள் 500 சுற்றுக்களை கொண்டுள்ளது. கம்பிச்சுருள் வழியே 2 A மின்னோட்டம் பாய்கிறது எனில், கம்பிச்சுருளின் தன்மின் தூண்டல் எண் கணக்கிடு. (மா-13)
8. 0.5 $m^2$பரப்பளவையும், 10 சுற்றுக்களையும் கொண்ட ஒரு கம்பிச்சுருளின் தளம் 0.2 $Wb/m^2$ காந்தப்புலத்திற்கு குத்தாக உள்ளபோது கம்பிச்சுருளின் வழியே பாயும் காந்தப் பாயத்தைக் கணக்கிடுக. (மா-07)
9. 1000 Hz அதிர்வெண் கொண்ட மாறுதிசை மின்னோட்ட மின் சுற்றில் இணைக்கப்பட்டுள்ள மின்தேக்கியின் மின்தேக்கு திறன் 2 μF. செயல்படுத்த படும் மின்னி யக்கு விசையின் r.m.s மதிப்பு 10 V எனில் சுற்றில் பாயும் தொகு பயன் மின்னோட் டத்தை காண்க. (ஜு-08)
10. 1000 Hz அதிர்வெண் கொண்ட மாறுதிசை மின்னோட்ட மின் சுற்றில் இணைக்கப்பட்டுள்ள 2μF மின்தேக்குத் திறனுடை ய மின்தேக்கியின் மின் மறுப்பை கணக்கிடுக. (ஜு-09).
11. 25 சுழற்சிகளைக் கொண்ட சைன் அலை வடிவ மின்னோட்டத்தின் rms மதிப்பு 30 A, எனில் அதற்கான சமன்பாட்டை எழுதுக. (செ-11, மா-12, ஜூ--13)

## 4. மின்காந்த தூண்டலும், மா.தி. மி 5 மதிப்பெண் வினாக்கள்

1. பாரடேயின் மற்றும் லென்சின் மின்காந்த தூண்டல்விதிகளைக் கூறுக. (J-11)
2. இரு நீண்ட வரிச்சுருள்களுக்கு இடையேயான பரிமாற்று மின்தூண்டலை விவரி, மற்றும் அதன் பரிமாற்று மின்தூண்டலுக்கான சமன்பாட்டைப் பெறுக. (ஜு-08,மா-12)
3. சுழல் மின்னோட்டத்தின் பயன்பாடுகளை விவரி. (மா-07,10)
4. வரையறு மின் மாற்றியின் பயனுறு திறன். மின் மாற்றியில ஏற்படும் திறன் இழப்புகளை அவற்றை குறைக்கும் வழிகளையும் விளக்குக. [DPM,J-10,M-11, J,O -06]
5. மின்தூண்டி மட்டுமே உடைய A.C சுற்றில் மின்னோட் டத்திற்கும் மின்னழு த்தத்திற்கும் இடையேயான கட்டத் தொடர்பினை பெறுக. (வரைபடம் தேவையில்லை) (M-06,08]
6. ஒரு சுருள் உள்ளடங்கு பரப்பளவை மாற்றுவதன் மூலம் மின்னியக்கு விசை தூண்டப்படும் விதத்தை விளக்குக. (ஜு-07,செ-07,செ-08,12,மா-09, ஜூ-13)
7. மின்மாற்றியின் பல்வேறு இழப்புகளையும் அவற்றை குறைக்கும் முறைகளை யும் கூறுக. (ஜு-06,10,அ-06,09,மா-13)
8. சுழல் மின்னோட்டத்தின் பயன்பாடுகளை கூறுக. (மா-07)
9. மாறுதிசை மின்னியக்கு விசை செயல்படுத்தப்படும் மின்தடையாக்கி மட்டுமே உடைய ஒரு சுற்றிலி பாயும் மின்னோட்டத்திற்கான சமன்பாட்டைப்பெறுக. மின்ன ழுத்தத்திற்கும் இடையேயான கட்டத் தொடர்பினை பெறுக. (அ-11, ஜு-12)

## 4. மின்காந்த தூண்டலும், மா.தி. மி 5 மதிப்பெண் கணக்கீடுகள்

1. ஒரு மாறுதிசை மின்னோட்ட மின்னியற்றி 10000 சுற்றுக் களையும் 100 $cm^2$ பரப்பளவையும் கொண்டுள்ளது. 3.6 x $10^{-2}$ T அளவுள்ள சீரான காந்தப்புலத் தில் கம்பிச் சுருளானது 140 rpm என்ற கோணத்திசை வேகத்தில் சுழல்கிறது. தூண்டப்படும் மின்னியக்கு விசையின் பெரும் மதிப்பைக் காண்க. [J-09]

## 4.மின்காந்த தூண்டலும், மா.தி. மி 10 மதிப்பெண வினாக்கள்

1. காந்தப்புலத்தில், கம்பிச்சுருளின் திசையமைப்பை மாற்றுவதன் மூலம், அதனுள் மின்னியக்கு விசையை தூண்டும் முறையை கருத்தியல் விளக்கத்துடன் விவரி. [DPM,J-08,S-09, M-10,13,J-10,O-11]
2. ஒரு கட்ட மாறு திசை மின்னியற்றியின் தத்துவம், அமைப்பு, மற்றும் வேலை செய்யும் விதத்தை விவரி. [M-07,08,11, J-07,13,S-7,11,12,O-10]
3. சுழல் மின்னோட்டம் என்றால் என்ன? அவற்றின்பயன் பாடுகளை விவரி. அவற்றை எவ்வாறு குறைக்கலாம்? (மா-09)
4. மின் மாற்றியின் தத்துவம், அமைப்பு மற்றும் கொள்கையை விளக்குக. (படம் தேவையில்லை) [M-06,12]
5. மாறு திசை மின்னியக்கு விசை மூலம் ஒன்று தொடர் இணைப்பில் உள்ள மின் தடையாக்கி **R,** மின் தூண்டி L மற்றும் மின்தேக்கி C ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. மின்னழுத்தக் கட்டப்படம் மற்றும் மின்னெதிர்ப்பு படம் ஆகியவற்றைக்கொண்டு
   a) தொகு பயன் மின்னழுத்தம் b) மின்னெதிர்ப்பு
   c) மின்னோட்டம் மற்றும் மின்னழுத்தம் இடையேயான கட்டத்தொடர்பு ஆகியவற்றிற்கான சமன்பாடுகளைத் தருவி. [J-06,J-09,S-12]
6. தூய மின்தூண்டி மட்டுமே உடைய a.c. சுற்றில் மின்னோட்டத்திற்கும், மின்னழுத்தத்திற்கும் இடையே உள்ள கட்டத்தொடர்பினை பெறுக. தகுந்த வரைபடம் வரைக. (செ-08)
7. மின்தேக்கி மட்டுமே உள்ள ஒரு மாறுதிசை மின்னோட்டச் சுற்றில், எந்த ஒரு கணத்திலும் செயல்படும் மின்னியக்கு விசை $e = E_0 \sin\omega t$. எந்த ஒரு கணத்திலும் செயல்படும் மின்னோட்டத்திற்கான சமன்பாட்டைப் பெறுக. மின்னோட்டத்திற்கும் மின்னியக்கு விசைக்கும் இடையேயான கட்டத் தொடர்பை வரைபடத்தின் மூலம் விளக்குக. (அ-06)


*ஆ.முருகையா, முதுகலை ஆசிரியர்- அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி, குரோம்பேட்டை- சென்னை-44.*
மின்னஞ்சல்: *tnhspgtakpm@gmail.com*